Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 176

சனிக்கிழமை
21 மே 2022

வைகாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

# 21ஆவது திருத்தம் திங்களன்று அமைச்சரவையில் முன்வைப்பு

கொழும்பு, மே 21

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலம் எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். 15 ➤

## நிறைவேறுமா 21ஆவது திருத்தம்?

### பெரும்பான்மை சந்தேகமே

கொழும்பு, மே 21

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டால் அதற்குப் பெரும்பான்மை கிடைக்குமா? என்ற கேள்வி எழுந் 15 ➤

கோத்தாவை விமர்சித்து
புதவியிழந்த இருவர் அமைச்சர்களாயினர்
பக். 02 ➤

வீராப்புப் பேசிய சு.க.வும் சரண்!
பக். 02 ➤

சுயாதீன அணியிலும் இருவருக்கு அமைச்சு
பக். 02 ➤

இன்று

## பெற்றோல், டீசல் தரையிறக்கம்!

கொழும்பு, மே 21

மற்றுமொரு கப்பலில் இருந்து ஒரு தொகுதி டீசல் மற்றும் பெற்றோல் என்பன இன்று தரையிறக்கம் செய்யப்படும். இவை கூடிய விரைவில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவித்தார் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர. 15 ➤



## எங்கள் குடும்பங்களுடன் சேர்ந்து வாழ வழிசெய்க

### ஈழ உறவுகள் இந்தியாவில் போராட்டம்

புதுடில்லி, மே 21

தமிழகத்தில் உள்ள திருச்சி மத்திய சிறைச்சாலையின் சிறப்பு முகாம்களில் நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள், தம்மை உடனடியாக விடுதலைசெய்து தமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும் என்று கோரிக்கை 15 ➤

## இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு மின்சாரம்

### நிர்மலா சீதாராமனிடம் இ.தொ.கா. கோரிக்கை

கொழும்பு, மே 21

இலங்கையின் நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 15 ➤

காலிமுகத்திடல் வன்முறை

## நாமலிடம் நேற்று சி.ஐ.டி விசாரணை

கொழும்பு, மே 21

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட அரச எதிர்ப்பாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று விசாரணைகளை மேற்கொண்டனர். 15 ➤



டீசல் இல்லை

## நடுத்தெருவில் நின்றது இ.போ.ச.வின் பேருந்து

யாழ்ப்பாணம், மே 21

டீசல் இல்லாத காரணத்தால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தொன்று 15 ➤

## படைமுகாமை விஸ்தரிக்க தனியார் காணி சுவீகரிப்பு

### அளவீட்டு நடவடிக்கைக்கு மக்கள் நேற்று எதிர்ப்பு

கொடிகாமம், மே 21

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமை விஸ்தரிப்பதற்கு அருகிலுள்ள தனியார் காணியை அளவீடு செய்வதற்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட முயற்சி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது. 15 ➤

ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை

## போர்க்குற்றவாளிகளை தண்டிக்க இரட்டிப்பு வேகத்தைக் காட்டுக!

### கனேடிய எம்.பி. வலியுறுத்து



ஒட்டாவா, மே 21

ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்தோரை நீதியின் முன்னர் நிறுத்துவதற்கு இரட்டிப்பு வேகம் காட்டவேண்டும் என்று கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் பியர் பொலிவேரா தெரிவித்தார்.

தமிழின அழிப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நீதியை, அமைதியை, மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த இனப்படுகொலையைச் செய்தவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு எம்மை நாம் அர்ப்பணிக்க வேண்டும். எமது வேகத்தை இரட்டிப்பாக்க வேண்டும் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெயிலில் மக்கள் கால் கடுக்க காத்திருக்க

# சொகுசு காருக்கு பெற்றோல் எரிபொருள் நிலையத்தில் குடிப்பம்

யாழ்ப்பாணம், மே 21
சுன்னாகத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்களுக்கு பெற்றோல் விநியோகிக்காது. சொகுசு காரில் வந்த ஒருவருக்கு மாத்திரம் பெற்றோல் வழங்கியமையால் பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.
சுன்னாகம் சந்திக்கு சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் மக்கள் பிரவேசிக்காதவாறு கயிறு கட்டப்பட்டிருந்தது. பெற்றோல் வரும் என நம்பி மக்களும் வெயிலில் கால் கடுக்க நீண்ட நேரமாகக் காத்திருந்தனர். இந்த நிலையில் சொகுசு கார் ஒன்று எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் சென்றது. அந்தக் காருக்கு ஊழியர்கள் பெற்றோல் விநியோகித்தனர்.
இதனையடுத்தே அங்கு நின்ற மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர்களுடன் தர்க்கப்பட்டனர். இறுதியில் சுன்னாகம் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.
இந்த எரிபொருள் நிலைய வளாகத்



தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வரையில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருவரதும் படங்களைத் தாங்கிய கட்டவுட் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-125)



# வவுனியாவில் இளநீர் விற்பனை அமோகம்

வவுனியா, மே 21
வவுனியாவில் கடும் வெயிலுடன் கூடிய வெப்ப காலநிலை நிலவுவதால் இளநீர் பெருமளவில் விற்பனையாகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.
இதற்கமைய இளநீர் ஒன்று 100 ரூபா தொடக்கம்120ரூபாவரைவிற்பனையாகின்றது. காலநிலை வெப்பத்தைப்போக்குவதற்காகவே மக்கள் பெருமளவில் இளநீரைக் கொள்வனவு செய்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ஒ-14-110)

## 21ஆவது...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்று முற்பகல் பதவியேற்ற அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, பிறபகல் நீதி அமைச்சில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.
அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே, 19ஆவது திருத்தச்சட்டத்துக்கு புத்துயிர் கொடுப்பதற்காக 21ஆவது திருத்தச்சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்ற உறுதிமொழியை வழங்கினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'19ஆவது திருத்தச்சட்டம் ஊடாக ஜனநாயக முறைமை ஏற்படுத்தப்பட்டது. எனினும், 20ஆவது திருத்தச்சட்டம் ஊடாக அது இல்லாது செய்யப்பட்டது. எனவே, அரசமைப்பில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அது எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படும். அதன்பின்னர் வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.
'19' இன் நிலை மீண்டும் ஏற்பட்ட பிறகு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, நாடாளுமன்ற ஆட்சிமுறைமை பலப்படுத்தப்படும். உயர்பதவி நியமனங்களுக்கான அரசமைப்புப் பேரவை மீள அமைக்கப்படும். ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிப்பது தடைப்படும்.
அதேவேளை, இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் ஊடாக தடைவிதிக்கப்பட்டிருந்தது. எனினும், இரட்டைக் குடியுரிமை உடைய பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக இந்த சரத்து 20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக நீக்கப்பட்டது. பஸில் நாடாளுமன்ற உறுப்பினரானார். அமைச்சரவையிலும் இடம்பிடித்தார். தற்போது 21 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக 'இரட்டைக் குடியுரிமை' தடை மீள அமுலாகும். எனவே, சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பஸில் ராஜபக்சவின் எம்.பி. பதவியும் பறிபோகும் நிலை ஏற்படும் என்றார்.
2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கீதா குமாரசிங்க, 19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இரட்டை குடியுரிமை உடையவர் என்பதால், உயர்நீதிமன்ற தீர்ப்பின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார். அதே நிலை பஸிலுக்கு ஏற்படும் என்பதே அமைச்சரின் தர்க்கமாகும்.
(அ-ம-44)

## படைமுகாமை...

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 15 ஆவது கஜபாகு படைப்பிரிவு அமைந்துள்ளது. இந்தப் படைப்பிரிவை விரிவாக்கும் நோக்குடன் அருகிலுள்ள தனியாருக்குச் சொந்தமான 10.5 பரப்புக் காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
தனியாருக்கு பல்வேறு வகையிலும் அழுத்தங்களைப் பிரயோகித்தே சீருடையினர் இணக்கத்தைப் பெற்றுக் கொண்டனர். இதன் அடிப்படையில் இராணுவ முகாமுக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு அமைவாக நில அளவைத் திணைக்களத்தினர் காணியை அளவீடு செய்ய முற்பட்டனர்.
இதற்கிடையில் சீருடையினரின் அழுத்தங்களாலேயே அவ்வாறானதொரு முடிவை எடுத்ததாக காணி உரிமையாளர் மக்கள் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் அவர் தனது முடிவையும் மாற்றியுள்ளார். இதனால் காணி அளவீட்டு நடவடிக்கைக்கு நேற்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.
நேற்றைய எதிர்ப்பு நடவடிக்கையின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தார். (அ-ஒ-5)

## இந்தியாவிடம்...

இ.தொ.கா முன்வைத்துள்ளது.
இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டத் தலைவர்களான செந்தில் தொண்டமான், ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன் போதே அவர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.
அதேபோன்று இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் நலன் கருதியும் இந்திய அரசாங்கம் உதவிகளைச் செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம)

## நடுத்தெருவில்...

இடைவழியில் நின்ற சம்பவம் கோவில் குளம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.
யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற பேருந்தே இவ்வாறு இடைநடுவில் நின்றது. அதன்பின்னர் மாற்று பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு பயணிகள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். மாற்றுப் பேருந்து வரும்வரையில் தாம் சுமார் ஒன்றரை மணிநேரம் வீதியில் காத்திருக்க வேண்டியேற்பட்டது என்று அந்தப் பேருந்தில் பயணித்தவர்கள் தெரிவித்தனர். (அ-ம-21)

## எங்கள்...

விடுத்துள்ளனர்.
நுழைவிசைவு முடிந்த பின்னர் இந்தியாவில் தங்கியிருந்தமை, கடல் வழியாக சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தமை, இந்தியக் கடவுச்சீட்டை சட்டவிரோதமாக எடுக்க முயன்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது.
எனினும் கடந்த மூன்று வருடங்களாகத் தமக்கு எதிரான எவ்விதமான வழக்கு விசாரணைகளும் இடம்பெறவில்லை என்றும் வழக்குகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும் அந்த உறவுகள் கவலை தெரிவித்துள்ளனர்.
(ம-20)

## பெற்றோல்,...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த இரண்டு நாள்களாக நாடெங்கிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் தடைப்பட்டுள்ளது. நாளை (இன்று) மற்றொரு கப்பலில் இருந்து பெற்றோல் , டீசல் என்பன இறக்குமதி செய்யப்படும். அவை விரைவில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படும் - என்றார். (அ-ம)

## நாமலிடம்...

காலிமுகத்திடலில் மே 9ஆம் திகதியன்று அரச எதிர்ப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து பொதுமக்கள் வெகுண்டெழுந்து அரச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெரமுனவின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டோரின் சொத்துக்களுக்கு கடும் சேதம் ஏற்படுத்தியதுடன் அவற்றை தீக்கிரையாக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர்.
இதையடுத்து ஜனநாயக மரபுகளுக்கு அமைய காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி அதைக் கலவரமாக மாற்றிய குற்றத்துக்காக பலரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், நாமலிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று பலமணிநேரமாக வாக்குமூலத்தைப் பதிவுசெய்தனர். (அ-ம)

## நிறைவேறுமா...

துள்ளது.
21ஆவது திருத்தம் அமைச்சரவையில் நாளைமறுதினம் முன்வைக்கப்பட்டு அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கினாலும் அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை.
இந்த 21ஆவது திருத்தத்தின் மூலம் பஸிலின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சவாலுக்கு உட்படுத்தப்பட வாய்ப்புக்கள் இருப்பதால் அதற்கு பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்களாக என்பது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது. எனவே இந்தச் சிக்கலால் 21ஆவது திருத்ததில் சில சமாளிப்புக்களை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைமை கொந்தளிக்கவே கோத்தா முன் பதவியேற்றேன்

*அதுதான் படமும் எடுக்கவில்லை என்கிறார் ஹரின் பெர்னாண்டோ*

**கொழும்பு, மே 21**

**ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜனாதிபதியின் முகத்தைப் பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது. அதனால்தான் அமைச்சுப் பதவியை ஏற்கும்போது கூட சம்பிரதாயத்துக்கும் ஒளிப்படம் எடுக்கவில்லை- இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**



அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்று நடத்தினர். இதன்போதே ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசாங்கம் ராஜபக்ச குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வரவில்லை. நாட்டைக் காப்பாற்றவே வந்தது. இதனைக் கோத்தா கோ கமவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களிடம் கூறுகின்றேன். அதேபோல 'கோ ஹோம் கோத்தா' என்ற எனது நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை. சஜித் பிரேமதாஸ தூய்மையான அரசியல் தலைவர். அவரைக் குறைகூற விரும்பவில்லை.

ஆனாலும் சவாலை ஏற்க அவர் முன்வரவில்லை. கட்சிக்காகவே நான் அமைச்சுப் பதவியை ஏற்றேன்.

கட்சியுடனேயே தொடர்ந்தும் பயணிக்க எதிர்பார்க்கின்றேன். சவாலை ஏற்று, மூன்று மாதங்கள் அமைச்சராகச் செயற்படுவேன், பஸிலோ வேறு நபர்களோ காலை வாரினால் வெளியேறுவேன்.

நாடு உறுதிப்பாடடைந்த பின்னர், ஜனாதிபதி பதவி விலகுவார் என நம்புகின்றேன்.

19ஆம் திருத்தம் நடைமுறையாகும் என்ற உறுதிமொழியுடன்தான் பதவி ஏற்றேன். கட்சியைக் காட்டிக் கொடுக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை உள்ளிட்ட நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன, - என்றார். (ஒ-இ)

# அமைச்சர் ஹரினின் பொய்யை அம்பலப்படுத்தியது ஒளிப்படம்!



கொழும்பு, மே 21

அமைச்சரவை பதறியேற்கும்போது பகைமை கொந்தளிக்கவே பதவியேற்றேன் என்றும், சம்பிரதாயபூர்வத்துக்கேனும் ஓர் ஒளிப்படம் கூட எடுக்கவில்லை என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்த நிலையில், அவர் சிரித்த முகத்துடன் ஜனாதிபதியின் முன்பாக பதவியேற்கும் ஒளிப்படம் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவால் இந்த ஒளிப்படம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஹரின் பெர்னாண்டோ மலர்ந்த முகத்துடன், ஜனாதிபதிக்கு கும்பிடு போட்டு, இரு கரங்களால் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொள்கின்றார். இதையடுத்து அமைச்சர் ஹரின் தெரிவித்தது முழுப்பொய் என்பது அம்பலமாகியுள்ளது. (ம)

## மீண்டும் பழைய ஆட்சிதான்

*நிமாலின் பதவியேற்பு கட்சியின் முடிவை மீறிய செயல் என்கிறார் மைத்திரிபால*

கொழும்பு, மே 21

கட்சியின் தீர்மானத்தை மீறியே நிமால் சிறிபால டி சில்வா அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

சர்வகட்சி இடைக்கால அரசாங்கமே எமது யோசனையாக இருந்தது. தேசிய நிறைவேற்று சபையை நிறுவுமாறு கோரியிருந்தோம். ஆனால், தற்போது பழைய ஆட்சிக்கே புத்துயிர் கொடுக்கப்படுகின்றது. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை மீறியே எமது கட்சி உறுப்பினர் அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார் - என்றார். (ஒ-22)

## அரசாங்கத்துக்கான ஆதரவை மீள்பரிசீலனை செய்கிறோம்

*ஹரின், மனுஷ பதவியேற்றதால் சஜித் பிரேமதாஸ கொதிப்பு*

கொழும்பு, மே 21

எமது கட்சியின் தீர்மானத்தை மீறி அரசு பக்கம் சாய்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்ட ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவர்கள் இருவரினதும் இந்தச் செயற்பாடு அருவருக்கத்தக்கது. இவ்வாறு தெரிவித்த தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எமது கட்சியிலிருந்து உறுப்பினர்களை அரசுப் பக்கம் எடுத்தால் எமது ஆதரவை வாபஸ் பெறுவோம் எனவும் நாம் ஏற்கனவே தீர்மானித்திருந்தோம்.

இந்த நிலையில், ஹரினுக்கும், மனுஷவுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளதால் அரசாங்கத்துக்கான எமது ஆதரவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கூடி முடிவெடுக்கும் - என்றார். (ஒ-22,44)




ஆடின காலும் பாடின வாயும் சும்மா இருக்காது கண்டியளோ. அதைமாதிரி, என்.ஜி.ஓ., புரஜெக்ட் எண்டு பழக்கப்பட்ட வடக்கு மாகாண 'க்ளீன் சேவ்ஜீ' இங்கையும் அதே வேலையைத் தொடங்கிறார் எண்டு அதிகாரியள் ஒரே புறுபுறுப்பு.

'வடக்கில உள்ள முக்கியமான ஆஸ்பத்திரியளின்ர ஓ.பி.டி. செக்சனை கணினிமயப்படுத்தவேணும், உடனடியாக அதுக்கான புறப்போசலைத் தாங்கோ' எண்டு அரசாங்கம் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவிச்சிருந்தது. 'வரிசை யுகம்' தொடங்கிறதுக்கு முதல், அரசாங்கத்தின்ர கையில டொலர் தாராளமா புழங்கேக்கதான் இப்பிடி ஒரு திட்டத்தை கொண்டுவர பிளான் போடுப்பட்டிருந்திச்சு. அப்பிடி ஒரு அறிவிப்பு வந்தவுடன, சுகாதாரத்துறை அதிகாரியளும் வடக்கிலை முக்கியமான 14 ஆஸ்பத்திரியளின்ர ஓ.பி.டி. செக்சனை கணினிமயமாக்கிற புறப்போசலை ரெடி பண்ணி முடிய, நாட்டின்ர நிலைமை தலை கீழாயிட்டுது. அஞ்சுசதக் காசே அரசாங்கத்திட்ட இல்லாத நிலையில, அந்தக் கணினிமயப்படுத்திற திட்டத்துக்கு மில்லியன் கணக்கில பட்ஜெட் வந்திருக்கு. இந்த நிலையில என்னெண்டு இந்தத் திட்டம் சரிவரப்போகுது? சரி, எதுக்கும் செய்த திட்ட வரைவை 'ஜீயிட்ட' குடுப்பம் எண்டு, கொண்டு போய் அவருக்கு முன்னால புறப்போசலைக் குடுத்திருக்கினம்.

'சேர், ஆஸ்பத்திரியளின்ர ஓ.பி.டி. செக்சனை கணினி மயப்படுத்த ஒரு புறப்போசல் தரச்சொல்லி அரசாங்கம் அறிவிச்சது. நாங்கள் அதைச் செய்திட்டம். ஆனால் மில்லியன் கணக்கில செலவு வரும் போல' எண்டு தயக்கத்தோட சொல்லியிருக்கினம். அவையின்ர புறப்போசலை பார்த்த 'ஜீ' சொன்ன பதில் அவையைத் தூக்கிவாரிப்போட்டிருச்சு.

'இதுக்கு வாற தொகை வழக்கமான புரஜெக்ட்டுக்கு கிட்டவும் வரேலை. தொகை இன்னும் கூடவா இருக்கோனும். நீங்கள் ஒருக்கா வடக்கில இருக்கிற மிச்ச 103 ஹொஸ்பிட்டலையும் சேர்த்து, எல்லாமா 117 ஹொஸ்பிட்டலிலையும் உள்ள எல்லா செக்சன்களையும் கொம்பியூட்டரைஸ் பண்ணுற மாதிரி இன்னொரு புறப்போசல் செய்யுங்கோ' எண்டு சொல்லிட்டு போட்டாராம்.

சுகாதாரத் திணைக்கள அதிகாரியளுக்கோ அஞ்சும் கெட்டு, அறிவும் கெட்டநிலை. ஏனெண்டால் நாடே சோத்துக்கு வழியில்லாமல் சிங்கியடிக்கேக்க, இப்பிடி பில்லியன் ரூபா கணக்கில தேவைப்படுற ஒரு வேலைத்திட்டத்தை எப்பிடிச் செய்ய ஏலும்? அதோட ஏற்கனவே தொடங்கின எல்லா அபிவிருத்தித் திட்டங்களையும் நிப்பாட்டச் சொல்லி அரசாங்கம் அறிவிச்சிருக்கு. அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு சம்பளம் கூட குடுக்க வக்கில்லாமல், என்ன வழியில அதைக் குறைக்கலாம் எண்டும் யோசிச்சுக் கொண்டிருக்கினம். பில்லியன் கணக்கில காசுக்கு வேலை வைக்கிற புரஜெக்ட்டுக்கு எப்பிடி பணம் கிடைக்கும், ஆர் அதைத் தருவினம் எண்டும் 'ஜீ' ஒழுங்காச் சொல்லேலையாம். இப்பிடிப்பட்ட நிலையில அவசரமேயில்லாத ஒரு காரியத்துக்கு வேலைமினக்கெட்டு, புறப்போசல் தயாரிச்சு, பிறகு அந்த வேலைத்திட்டம் நடக்காமல் போறதைவிட, உருப்படியா வேற வேலையைப் பாப்பம் எண்டு அதிகாரியள் நினைச்சினம். அதால புறப்போசல் ஒண்டையும் அவை தயாரிக்கேலை. ஆனால் 'ஜீ' அதை மறக்கேலை. கொஞ்சநாளில அவையைக் கூப்பிட்டு 'புறப்போசல் என்ன கட்டம்?' எண்டு கேக்க, இவை அதை ரெடி பண்ணேலை எண்டு மறுமொழி சொல்ல, அவருக்கு கடும் கோபம் வந்துட்டுதாம். கண்டபடி பேசி, 'நான் சொன்னா செய்யோனும். நடக்குமா, இல்லையா எண்டு யோசிக்கிறது உங்கட வேலை இல்லை. உடன அந்தப் புறப்போசலை ரெடி பண்ணுங்கோ' எண்டு எரிஞ்சு விழுந்தாராம். இப்போதைக்கு நடக்கவே நடக்காத ஒரு வேலைத்திட்டமெண்டு தெரிஞ்சும், மற்ற எல்லா வேலையளையும் விட்டிட்டு அதிகாரியள் 117 ஆஸ்பத்திரியளையும் கணினிமயப்படுத்திறதுக்கு புறப்போசல் தயாரிக்கினமாம். கூழே குடிக்க வழியில்லாமல் இருக்கேக்க, கொப்பளிக்க பன்னீர் கேக்கிற கதைதான் இதுவும்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலத்தை நினைவுபடுத்தி சபைக்கு வந்த சிக்கன விளக்கு

**யாழ்ப்பாணம்,மே 21**

**நேற்று இடம் பெற்ற வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வின்போது சபையின் உறுப்பினரான ஜெசீதன் போர்க்காலத்சிதை நினைவு படுத்தும் வகையில் சிக்கன விளக்கை ஏந்தியவாறு சிவப்பு, மஞ்சள் தமிழ்த் தேசிய எழுச்சிக் கொடியைக் கழுத்தில் அணிந்து சபைக்கு வருகை தந்தார். அவருடன் இணைந்து சபையின் உறுப்பினர்களான அனுசன், ஜிப்ரிக்கோ, ரமணன் ஆகியோரும் கழுத்தில் கறுப்புப்பட்டி அணிந்து வருகை தந்தனர்.**



சபையில் உரையாற்றிய ஜெசீதன், போரை எதிர்கொண்ட நாம், குழிகளை வெட்டி அவற்றுக்குள் பதுங்கி எங்களது உயிர்களைக் காப்பாற்றினோம். போர்க்காலத்தில் மின்சார ஒளியின்றி, எரிவாயு இன்றி நாங்கள் தவித்தபோது உடனடியாக எங்களுடைய மூதாதையர்கள் ஜாம் போத்தல் எடுத்து அதனுள் பஞ்சை நிரப்பி, நீரை ஊற்றி சிறுதுளி மண்ணெண்ணெயை இட்டு அதிலிருந்து வரும் வெளிச்சத்தில் வாழப் பழக்கினர். போரின் போது எங்களை அழிப்பதற்கு பல்வேறு உத்திகளை அரசாங்கம் கையாண்டது. ஆனாலும் நாங்கள் அதற்கு மாற்றாக பல விடயங்களைக் கண்டுபிடித்தோம். இவ்வாறே காலிமுகத்திடல் போராட்டத்தை நசுக்க பல்வேறு வழிகளை அரசாங்கம் கையாளக்கூடும். ஆனாலும் அவர்கள் ஓயாது போராடவேண்டும் - என்றார். (க-125)

## தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கைகள்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 21

இலங்கையில் உள்ள அரச அமைப்புக்கள் மற்றும் திணைக்களங்களால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், கடிதங்கள் ஆகியவை தனிச் சிங்கள மொழிகளிலேயே அனுப்பப்படுகின்றன என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பொது நிர்வாக அமைச்சிடம் கடிதம் மூலம் முறையிட்டுள்ளது.

அதில், அண்மைக்காலமாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டிய அவசர விடயங்களை அரச அமைப்புக்கள் மற்றும் திணைக்களங்கள் தனிச் சிங்கள மொழிகளில் சுற்றறிக்கைகளாகவும் அறிவித்தல்களாகவும் வெளியிடுகின்றன.

இதனால் நாட்டில் சிங்களமொழி மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது என அர்த்தப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு விடயமாகும். இனியும் இதுபோன்ற செயற்பாடுகள் தொடருமாயின் சட்டரீதியான அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (ச-27)

## வற்றாப்பளை ஆலய பொங்கல்; முன்னாயத்தக் கலந்துரையாடல்

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பிலான விசேட முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் உற்சவத்துடன் சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையில் இடம்பெற்றது.

கடந்த 3 வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளில் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் உற்சவம் இடம்பெற்ற நிலையில் இந்த ஆண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலயத்துக்கு வருகின்ற வீதிகள், ஆலயத்தில் குடிதண்ணீர், மலசலகூட வசதிகள், சுகாதார, பாதுகாப்பு, போக்குவரத்து, மின்சார வசதிகள் என அனைத்து விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

முன்னேற்பாடுகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்கும் ஆலயத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைத் தெரியப்படுத்துவதற்குமான கலந்துரையாடல் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

### திருக்கேதீச்சர ஆலய

## கும்பாபிஷேகத்துக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### ஆலய திருப்பணிச் சபையினர் கோரிக்கை



மன்னார், மே 21

திருக்கேதீச்சர ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி பக்திபூர்வமாக நடைபெறவுள்ள நிலையில் கும்பாபிஷேகத்துக்கு இன, மத பேதமின்றி அனைத்து மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஆலய திருப்பணிச் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பஞ்ச ஈஸ்வரங்களில் மிகப் பழைமையானதும் நாயன்மார்களால் தேவாரப் பாடல் பாடப்பட்டு மன்னார் மாவட்டத்தின் அடையாளங்களில் ஒன்றாகவும் விளங்கும் திருக்கேதீச்சரத்தின் திருப்பணி வேலைகள் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றன.

இந்திய அரசின் 375 மில்லியன் ரூபா நிதியில் மேற்கொள்ளப்பட்ட சிற்பவேலைப்பாடுகள் இந்திய சிற்ப ஆசாரியார்களால் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு நிறைவுறுத்தப்பட்டதுடன் ஆலயத்தில் அமைக்கப்பட்ட மகா மண்டபம், பிரதான மண்டபங்களுக்கான கருங்கற்கள் இந்தியாவின் மாமல்லபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்டன. ஆலயத்தின் பணிகள் அனைத்தும் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் நிறைவு பெற்ற போதிலும் கொரோனாவால் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை.

இந்த நிலையில் இந்த வருடம் நோய்த்தொற்று குறைந்து காணப்படுவதால் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்துக்கு இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து 40க்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்களும் தமிழ் வேத தேவார பாராயணம் பாடுவதற்கு தமிழ்நாட்டிலிருந்து 30 ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி, போக்குவரத்துத் தடைகள் மத்தியிலும் கும்பாபிஷேக நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-14. 213)

## சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 21

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயதான சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் என்று சிறுமியின் தாயாரால் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபரான 30 வயது இளைஞனைக் கைது செய்தனர்.

அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14,125)

### மன்னார் மாவட்டத்தில்

## முதற்கட்ட டீசல் விநியோகம்; சிறுபோக செய்கை ஆரம்பம்

மன்னார், மே 21

மன்னார் மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முதற்கட்ட டீசல் வழங்கப்பட்டதையடுத்து நடப்பு ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளது என விவசாய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் எம்.எஸ்.சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டபோதும் வயல்களை உழுவதற்கான டீசல் இன்மையால் 90 வீதமான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடமுடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் விவசாயிகளுக்கு 3 கட்டங்களாக 25 லீற்றர் டீசல் வழங்கப்படும் என மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய முதற்கட்ட டீசல் கடந்த 18ஆம் திகதி முதல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து அடுத்தகட்ட எரிபொருள் விநியோகத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் எம்மிடம் உறுதியளித்தார்.

இதையடுத்தே மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமான கட்டுக்கரைக்குளத்தின் கீழ் நடப்பு ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் என விவசாய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் எம்.எஸ்.சில்வா மேலும் தெரிவித்தார். (ச-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# இலங்கையில் உணவு நெருக்கடி தீர ஜப்பான் 1.5 மில்லி.டொலர் உதவி

கொழும்பு,மே 21

இலங்கையில் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்க ஜப்பான் 1.5 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவுள்ளது என்று இலங்கைக்கான ஜப்பானின் பதில் தூதுவர் கட்சுகி கொட்டாரோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் உள்ள சுமார் 15 ஆயிரம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும் 3 லட்சத்து 80 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கும் மூன்று மாதங்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவதற்கு அவசர நிதியுதவியை வழங்குகின்றோம். ஜப்பான் கடந்த 10 ஆண்டுகளாக பாடசாலை உணவுத் திட்டத்துக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான தகரத்திலடைக்கப்பட்ட மீன்களை சிறுவர்களுக்காக வழங்கியுள்ளது. இந்த மனிதாபிமான உதவியானது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை மக்களுக்கு உணவு அனுகல் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்த உதவும் என நம்புகின்றோம். பலவீனமடைந்து வரும் பொருளாதாரத்தால் இலங்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக உணவு உட்பட அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை மற்றும் விலைகள் அதிகரிப்பு என்பவை ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்குத் தடையாக வுள்ளன. சிறுவர்கள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு வீதம் அதிகமாகவுள்ளது. ஆரம்ப வயதுக் குழந்தைகளில் சுமார் 40 வீதம் பேர் தங்கள் உயரத்துக்கு ஏற்ப உடல் எடை குறைந்தவர்களாக இருக்கின்றனர் - என்றார். (க-இ)



# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பிரதமர் ரணில் சந்திப்பு

கொழும்பு,மே 21

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளார்.

"இலங்கையின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கும் சர்வதேச உதவிகள் தொடர்பில் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. "இலங்கையில் உள்ள ஐ.நா. உணவு விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவை இலங்கையின் விவசாயத்துறை புத்துயிர் பெறுவதற்கான முயற்சிகளுக்கு வழிவகுக்கும்" என்று சந்திப்புத் தொடர்பில் ஹனா சிங்கர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (க-இ)

# இலங்கைக்கு உதவ மாலைதீவு தயார்

கொழும்பு,மே 21

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமான உதவிகளை இயலுமான அனைத்து வழிமுறைகளிலும் வழங்கத் தயார் என்று மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹீம் மொஹமட் சோலி தெரிவித்துள்ளார்.

அதேவேளை நீண்டகால நட்பு நாடான இலங்கைக்கு இயலுமான வழிகளில் உதவிகளை வழங்கத்தயார் என்று மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஷஹீட் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமான வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாக, மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# இலங்கை கடனாகப்பெற்ற டொலரை இந்திய ரூபாவில் செலுத்த இணக்கம்

## சலுகை காட்டுகிறது இந்தியா

கொழும்பு,மே 21

**இலங்கை பெற்றுக்கொண்ட 1 பில்லியன் டொலர் கடனை, இந்திய ரூபாவில் செலுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. பாரத ஸ்டேட் வங்கி இலங்கை அரசாங்கத்துடன் கடன் வசதி ஒப்பந்தத்தில் கடந்த மார்ச் மாதம், கையெழுத்திட்டது. இந்தியாவில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.**

எனினும், இலங்கை டொலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால், இந்தியாவுடனான கடன் வசதி ஒப்பந்தத்தின்படி, பணத்தைச் செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டிருந்தது. இது குறித்து இலங்கை, இந்தியாவுடன் தொடர் பேச்சுக்களை நடத்தியது.

இதனையடுத்து இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையிலிருந்து ஏற்றுமதி வருமானம் மற்றும் இலங்கை அரசாங்கத்துடனான பாரத ஸ்டேட் வங்கியின் கடன் வசதி ஒப்பந்தத்தைப் பெறுவதில் ஏற்றுமதியாளர்கள் அனுபவிக்கும் சிரமங்களைக் கருத்திற் கொண்டு, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வர்த்தக பரிவர்த்தனைகள் இந்திய ரூபாவில் தீர்க்கப்படலாம். அத்துடன் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிலிருந்து தகுதியான பொருள்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கான நிதியுதவி, இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் கீழ், ஏற்றுமதிக்குத் தகுதியுடையதா என்பதைப் பொறுத்து அனுமதிக்கப்படும் - என்றுள்ளது. (க-இ)

# சமுர்த்திக் கொடுப்பனவுக்காக அலைந்து திரியும் பயனாளிகள்

## பிரதேச செயலருக்கு முறைப்பாடு

சாவகச்சேரி,மே 21

கைதடி சமுர்த்தி வங்கிக்கு பல தடவைகள் அலைந்து திரியும் பயனாளிகளுக்கு, கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று பயனாளிகள், பிரதேச செயலகத்தில் முறையிட்டுள்ளனர்.

கொடுப்பனவு வரவில்லை என்று கூறி பயனாளிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில், கொடுப்பனவுகள் இழுத்தடிக்கப்படுவதால், சமுர்த்திப் பயனாளிகள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பில் பிரதேச செயலருக்கும் முறையிட்டுள்ளனர். கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதை வங்கி முகாமையாளரும் உறுதிப்படுத்தியுள்ளார். (சு-9)

# கடலில் தத்தளித்தோர் பாதுகாப்பாக மீட்பு

காற்றின் வேகத்தில், படகு கவிழ்ந்து நடுக்கடலில் தத்தளித்த மீனவர்கள் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இந்தச்சம்பவம் எழுவைதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தொழிலுக்குச் சென்றவர்களில் இருவர் படகு கவிழ்ந்து கடலில் வீழ்ந்ததை அவதானித்த மற்றப் படகுகளில் சென்றவர்கள், 45 நிமிடங்களில் அவர்களைப் பாதுகாப்பாக மீட்டனர். (க-9)

# இலங்கைக்கான கடன் திட்டம் செவ்வாயுடன் பேச்சுகள் முடிவு

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு,மே 21

இலங்கைக்கான கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான பேச்சுக்களை, எதிர் வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை சர்வதேச நாணய நிதியம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு அமைய, இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க அர்ப்பணிப்புடன் உள்ளோம். இலங்கை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண, பங்குதாரர்களுடன் பேச்சுக்களை முன்னெடுக்கின்றோம் என்று நிதியத்தின் பேச்சாளர் ஜெரி ரைஸ் தெரிவித்துள்ளார். (க-இ)

# இலங்கைக்கு கடன் வழங்க ஜி—7 மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு,மே 21

உலகின் 7 பொருளாதார வல்லரசுகளின் கூட்டணியான ஜி-7 மாநாட்டில், இலங்கைக்கு கடன் நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்ட வரைவு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் தேசத்துக்கான நீண்டகால தீர்வுகளைக் கண்டறிவதில் உறுதியாக இருப்பதுடன், சாத்தியமான கடன் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆக்கப்பூர்வமாக பேச்சுக்களை நடத்த வலியுறுத்தப்பட்டுள்ளது. இறுதி செய்யப்படும் வரைவு அறிக்கைக்கு முன்பு, கடன் வழங்கும் நாடுகளையும் ஒருங்கிணைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகள் ஒப்பிடக் கூடிய விதிமுறைகளில் கடன் நிவாரணம் வழங்கலாம். குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்குப் பெரிய கடன் வழங்குபவராக மாறியுள்ள சீனாவும் பங்களிக்கவேண்டும் என்று ஜி-7 நிதித் தலைவர்கள் வலியுறுத்தினர் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















# தாய்ப்பாலூட்டலின் தாற்பரியம்



**பத்மராசா பத்மநிரூபன்**
தாதிய உத்தியோகத்தர்
யாழ். போதனா மருத்துவமனை

தாய்ப்பால் என்பது இயற்கை இந்த உலகுக்குத் தந்த அரும் பெரும் சொத்தாகும். விலைமதிக்க முடியாத போசணைப் பெறுமதிகளையும் இன்னோரன்ன பல சிறப்புக்களையும் கொண்டமைந்து காணப்படுகின்றது. இயற்கையான உணவுகளில் தாய்ப்பாலே மிகவும் உன்னதமானதாகும். குழந்தையின் அடிப்படை உணவாகவும் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கேற்ற பாங்கில் அமைந்த உணவுப் பதார்த்தமாகவும் தாய்ப்பால் விளங்குகின்றது. குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய அனைத்துப் போசணைகளையும் வழங்கக்கூடிய ஒரேவழி தாய்ப்பாலூட்டலாகும். இது குழந்தையின் ஊட்டச்சத்து , உணர்ச்சி மற்றும் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. ஆனாலும் தற்காலத்தில் தாய்ப்பாலூட்டலுக்கு மாறாக அதற்கு இணையானது எனக் கருதப்படுகின்ற பால்மா வகைகளும் உணவு வகைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. குழந்தையின் நலனில் அக்கறை கொண்ட எவரும் தாய்ப்பாலுக்கு ஒப்பானதாக எந்தவொரு வர்த்தக ரீதியான உணவுப் பதார்த்தங்களையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் யூனிசெவ் போன்ற நிறுவனங்கள் செய்த ஆய்வுகளின்படி சர்வதேச ரீதியில் சரியான தாய்ப்பாலூட்டல் இன்மையாலும் தவறான உணவூட்டலாலும் சிசுக்களின் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.



பிறந்து முதல் ஆறுமாத காலம் வரை கட்டாய தாய்ப்பாலூட்டல் மாத்திரமே சரியானது என்று கூறப்படுகின்றது. முதல் ஆறு மாத காலம்வரை ஏற்படுகின்ற குடல் வளர்ச்சி, சமிபாட்டுத் தொகுதியின் முதிர்ச்சி என்பவற்றுக்கு ஏற்ப ஓர் உணவாகத் தாய்ப்பாலே விளங்குகின்றது. சாதாரண உணவுகளை கொடுக்கத் தொடங்கிய பிற்பாடும் இரண்டு வயது வரை தாய்ப்பாலூட்டல் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்கின்றது. சிறந்த நிர்ப்பீடன சக்தியை அதாவது நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகின்றது. தாய்ப்பாலூட்டலின் நன்மைகளை நாம் பின்வருமாறு நோக்கலாம்.

### போசணைப் பெறுமதி

தாய்ப்பாலானது பல உன்னதமான அனைத்துப் போசணைப் பதார்த்தங்களையும் கொண்ட ஒரு முழு உணவாகக் கருதப்படுகின்றது. குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் சரியான வீதத்தில் கொண்டுள்ளது. மேலும் நரம்பு மண்டல விருத்திக்கு அவசியமான ஊட்டச்சத்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நரம்புக்கலங்களை சூழவுள்ள கல உருவாக்கத்தில் பங்கெடுக்கும் மிக முக்கியமான பதார்த்தம் தாய்ப்பாலிலே உண்டு. இலகுவில் சமிபாடடையக் கூடியதாகவும் அகத்துறுஞ்சப்படக்கூடிய ஒன்றாகவும் விளங்கு கின்றது. தாய்ப்பாலில் உள்ள பதார்த்தங்கள் இலகுவில் கொழுப்பு சமிபாட்டுக்கும் உதவுகிறது இவ்வாறு பல நன்மைகளைத் தாய்ப்பால் கொண்டுள்ளது.

### பாதுகாப்பு பெறுமதி

தாய்ப்பால் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் நிர்ப்பீடன சக்தியை கொண்ட உள்ளடக்கங்களைக் கொண்டது. இது பக்டீரியா, வைரஸ் தொற்றுக்களில் இருந்து பாதுகாக்க வழியமைக்கின்றது. மேலும் அழற்சித் தன்மை ஏற்படாமலும் சுவாசக் கஸ்டம், சுவாசப் பாதை சுருக்கம் போன்றவற்றையும் தோல் சம்பந்தமான தொற்றுக்களில் இருந்து பாதுகாக்கிறது. தாய்ப்பாலூட்டல் தாய்க்கும் பிள்ளைக்கும் இடையிலான அன்னியோன்ய பாசப் பிணைப்புக்கும், பாசப்பரிமாற்றத்துக்கும் காரணமாய் அமைகின்றது.

**தாய்ப்பால், நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் நிர்ப்பீடன சக்தியை கொண்ட உள்ளடக்கங்களைக் கொண்டது. இது பக்டீரியா, வைரஸ் தொற்றுக்களில் இருந்து பாதுகாக்க வழியமைக்கின்றது.**



#### தாய்க்கு ஏற்படக்கூடிய
## நன்மைகள்

தாய்ப்பாலூட்டலானது பிள்ளைப்பேற்றுக்குப் பின்னர் ஏற்படும் குருதிப் பெருக்கைத் தடை செய்கிறது.

மேலும் சரியான கருப்பை மீள சுருக்கத்துக்கும் உதவுகின்றது தாய்ப்பாலூட்டலின்போது ஏற்படுகின்ற மாதவிடாய் நிறுத்தம் இரும்புச்சத்து மீள்நிரப்பலுக்கு வழியமைக்கின்றது. இது பிள்ளைப்பேறுக்குப் பின்னர் ஆறுமாத கால இடைவெளிக்குள் அடுத்த கருத்தங்கலைத் தடுக்கின்றது. மேலும் உளரீதியாக சரியான தன்னிறைவுத் தன்மையையும் பாதுகாப்புப் பிணைப்பையும் ஏற்படுத்துகின்றது. மேலும் மார்பகப்புற்று நோய், கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோய் போன்றன ஏற்படுவதைத் தடுக்கின்றது.

தாயின் உடல்வாகுவை பேணுவதற்கும் மேலதிக கொழுப்பு குறைவதால் உடல்வாகு மெல்லியதாகப் பேணப்படுகின்றது.

இவ்வாறு பல நன்மைகளைக் கொண்ட தாய்ப்பாலூட்டலின் அவசியத்தையும் முக்கியத்தையும் உணர்ந்து நாம் செயற்படுவதன் மூலம் எதிர் காலத்தில் தேகத் திடமும், உளஆரோக்கியமும் மிகுந்த சிறுவர்களை உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நம்பிக்கை தரும் நகர்வு

**பொ**ருளாதார நெருக்கடியால் மூழ்கிக் கொண்டிருக்கிறது இலங்கை. தமிழ் மக்களும் அதன் பாதிப்புக்களை எதிர்கொள்ளாமல் அதிர்வலைகளை உணராமல் இல்லை. ஆனால் அதையும்தாண்டி தமிழ் மக்களுக்கென்று இருக்கின்ற தனிப்பட்ட பிரச்சினைகள் இலங்கைத் தீவில் அதிகம்.

இலங்கையில் இறுதிப்போரில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு இன்னமும் நீதி கிட்டவில்லை என்பது தமிழ் மக்களின் பெரும் ஆதங்கம். கடந்த மே 18 ஆம் திகதி கடந்து போன 13 ஆவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் அதைத்தான் சொல்லிச் சென்றது.

எதிர்பார்ப்புக்கள் என்றோ ஒருநாள் பூர்த்தியாகும் என்ற நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் தமிழ் மக்கள் முன்னுள்ள தெரிவாக இல்லை. ஆனால், கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையும், தென்னிலங்கையில் சிறுகச் சிறுக ஏற்பட்டிருக்கும் மாற்றங்களும் எங்கோ ஒரு தூரத்தில் மெலிதான நம்பிக்கையின் ஒளிக்கீற்றாகவே தமிழ் மக்களுக்குத் தென்படுகின்றன. இந்த மாற்றங்கள் வருவதற்கே 13 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலையே என்ற தீர்மானம் கனேடிய நாடாளுமன்றத்தில் கடந்த 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் ஏகமனதாக நிறைவேறியுள்ளது. உலகிலேயே முதன் முறையாக நாடாளுமன்றம் ஒன்றில் முள்ளிவாய்க்காலில் நடந்தேறியது இனப்படுகொலைதான் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றமை, நீதி தேடிய தமிழ் மக்களின் நெடிய பயணத்தில் கிடைத்ததொரு சிறு வெற்றியாகும்.

இனப்படுகொலை என்ற தீர்மானம் கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை எவ்வளவு வீரியமானது என்பதை இலங்கை அரசின் உடனடியான எதிர்வினையாற்றல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

'இனப்படுகொலை என்ற வார்த்தைக்கு குறிப்பிட்ட சட்டபூர்வ அர்த்தங்கள் இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை அல்லது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட அதன் எந்தவொரு அரசாங்கத்துக்கும் இடையிலான அமைப்புக்களாலும் இலங்கை மோதல்கள் தொடர்பாக அந்தச் சொற்பிரயோகம் ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை என்பதை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது' என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இறுதிப்போரில் நடந்தேறியது இனப்படுகொலை என்ற உண்மையை, நீதியின் அச்சாணியில் சுழலாத உலக நாடுகளை, ஏற்றுக் கொள்ள வைப்பது அவ்வளவு சுலபம் அல்ல. கனேடிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய இந்தப் பிரேரணையை உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழர்கள் தத்தமது நாடுகளிலும் நிறைவேற்றவேண்டும். அதற்கான போராட்டத்தை தீவிரப்படுத்தவேண்டும். இனப்படுகொலை நடந்தேறியது என்பதை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் போதுதான் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யும் நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும்.

தமிழகத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கடந்த சனிக்கிழமை பேசிய, ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை, இலங்கையின் இறுதிப் போர் நடந்தபோது, இந்தியப் பிரதமராக மோடி இருந்திருந்தால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கமாட்டார்கள் என்று கூறியிருந்தார்.

இறுதிப் போரின்போது இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அவர்கள் மீதான அரசியல் காழ்ப்புணர்வில் அண்ணாமலை இதைச் சொல்லியிருக்கலாம். ஆனால், 2014ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரையில் இந்தியாவில் பிரதமராக இருக்கின்ற மோடி, இலங்கைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற என்ன செய்தார் என்ற கேள்விக்கு அண்ணாமலையிடம் எந்தப் பதிலும் இருக்காது.

கனேடிய நாடாளுமன்றமே இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற தீர்மானத்தை நிறைவேற்றி புதிய உலகஒழுங்குஒன்றைத்திறந்து விட்டிருக்கின்றது. இனியாவது இந்தியா அத்தகையதொரு தீர்மானத்தை முடிந்தால் நிறைவேற்றட்டும். அதேபோன்று தமிழக சட்டசபையில் ஈழத் தமிழர்களின் அரசியல் விடிவுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இந்தியப் பிரதமர் மோடியால் முடியுமா? என்ற கேள்விக்கும் அண்ணாமலை பதில் சொல்லட்டும்.

அதன் பின்னர், தமிழ் மக்களை பிரதமர் [illegible] யிலிருந்திருந்தால் காப்பாற்றியிருப்பாரா? இல்லையா? என்பது தானாகத் தெரியவரும்.

நாளொரு நல்வார்த்தை

"நீ வாழ்க்கையில் முன்னேறவேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப் போக விரும்பாதே" - மாத்யூஸ்



# இனப்படுகொலைத் தீர்மானம் இலங்கை அரசு வருத்தம்

**கொழும்பு, மே 21**

**இலங்கையில் நடைபெற்ற தமிழினப்படுகொலை குறித்த பிரேரணை கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மே 18ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரித்தமை குறித்து இலங்கை அரசாங்கம் வருத்தம் வெளியிட்டுள்ளன.**

"இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றதாகக் கண்டறியவில்லை" என்ற கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டுக்கு முரணாக, இலங்கை குறித்த நாடாளுமன்றப் பிரேரணையில் உள்ள இனப்படுகொலை பற்றிய அப்பட்டமான பொய்யான குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்த அதே வேளையில், மோதலின் இறுதிக்கட்டத்தின்போது மோதல் வலயங்களில் இருந்த மக்களைக் காப்பாற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த மனிதாபிமான நடவடிக்கையின் உண்மையான நிலைமை குறித்து கனேடிய அரசாங்கத்துக்கு உயர் மட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டமை நினைவுகூரத்தக்கது. இன்று, மோதல் முடிவடைந்து 13 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கை தனது நல்லிணக்கச் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன், அது தொடர்பிலும் கனேடிய அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் தெளிவுபடுத்தி வருகின்றது.

இனப்படுகொலை என்ற வார்த்தைக்கு குறிப்பிட்ட சட்டபூர்வ அர்த்தங்கள் இருப்பதாகவும், ஐக்கிய நாடுகள் சபை அல்லது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட அதன் எந்தவொரு அரசாங்கத்துக்கும் இடையிலான அமைப்புக்களாலும் இலங்கை மோதல்கள் தொடர்பாக அந்த சொற்பிரயோகம் ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை என்பதை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது. இலங்கையின் நலன்களுக்கு விரோதமான புலம்பெயர் நாடுகளில் உள்ள சிறுபான்மை அரசியல் உந்துதல் கொண்ட இலங்கை எதிர்ப்புக் கூறுகளால் மட்டுமே இலங்கையின் நிலைமைக்கு இச்சொல் தன்னிச்சையாகவும் பிழையாகவும் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது என்று அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (ஒ-இ)

# பரீட்சை முடிவடையும்வரை இரவில் மின்தடைப்படாது

கொழும்பு,மே 21

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.சாதாரணதரப்பரீட்சை நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அது முடிவடையும் வரையில் மாலை 6.30 மணிக்குப் பின்னர் மின்சாரத் தடையை ஏற்படுத்த வேண்டாம் என்று இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் போதுமான எரிபொருள் மற்றும் நீர் வளங்களை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

நாளை

22.05.2022
ஞாயிற்றுக்கிழமை
வைகாசி 08

சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம்: 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் நிலையத்தில் குழப்பநிலை

யாழ்ப்பாணம், மே 21

யாழ். நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் குழப்பநிலை ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டநேரமாக எரிபொருளைப் பெற பொதுமக்கள் காத்திருந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் எரிபொருள் தீர்ந்துவிட்டது எனத் தெரிவித்துள்ளனர்.

இதனால் வரிசையில் காத்திருந்த மக்கள் கோபமடைந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்

இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலைய கொள்கலன்களைத் திறந்து காண்பித்த பின்னரே காத்திருந்த மக்கள் அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-26)

# 50,000 சிலிண்டர்கள் சந்தைக்கு விடுவிப்பு



**கொழும்பு,மே 21**

**நாடுமுழுவதும் நேற்று 50 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.**

நாட்டை வந்தடைந்துள்ள 3 ஆயிரத்து 900 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பலில் இருந்து, எரிவாயுவைத் தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இன்றும் 80 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப் படும் என்றும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (க-இ)

# வவுனியாவில் எரிவாயு கோரி மக்கள் வீதிமறியல் போராட்டம்



வவுனியா, மே 21

வவுனியாவில் எரிவாயு கோரி பொதுமக்கள் வீதி மறியல் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

வீட்டுப்பாவனைக்கான எரிவாயு வழங்கப்படும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்ததையடுத்து வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் அமைந்துள்ள எரிவாயு வழங்கும் நிலையத்தில் அதிகமான பொதுமக்கள் நேற்றுக் கூடியிருந்தனர்.

எனினும் பொதுமக்களுக்கு எரிவாயு வழங்கப்படவில்லை. இதனால் கொதிப்படைந்த மக்கள் எரிவாயு சிலிண்டர்களால் வீதியை வழி மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து அங்கு சிறிதுநேரம் பதற்றநிலை உருவாகியது. அதன்பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (ஒ-14,110)



*வவுனியாவில்*

# பெற்றோலுக்கு நீண்ட வரிசை

வவுனியா, மே 21

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலைப் பெற்றுக்கொள்ள நேற்று அதிகாலை தொடக்கம் வாகனங்களுடன் மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

அத்துடன் விவசாயத் தேவைகளுக்கு பெற்றோலைப் பெறவும் பொதுமக்களும் கொள்கலன்களுடன் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

வவுனியா - மன்னார் சந்தியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் மாத்திரமே நேற்றைய தினம் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-110)

## எரிபொருள்களைப் பதுக்கி அதிக விலைக்கு விற்பனை

*மக்கள் குற்றச்சாட்டு*

கொழும்பு,மே 21

எரிபொருளுக்காக மக்கள் நாளாந்தம் வரிசையில் காத்திருக்கும் நிலையில், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பதுக்கி, கறுப்புச் சந்தை ஊடாக அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளர்.

கறுப்புச் சந்தையில் 10 ஆயிரம் ரூபாவுக்கு 5 லீற்றர் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது. வெளிநாட்டுப் பிரஜைகள் இவ்வாறு அதிக விலைக்கு பெற்றோலைக் கொள்வனவு செய்வதால், பதுக்கல் அதிகரித்துள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## 4 எரிபொருள் நிலையங்களின் அனுமதிப்பத்திரம் உடன் இரத்து



கொழும்பு,மே 21

எரிபொருளை விநியோகிக்காமல் பதுக்கி வைத்திருந்தமை மற்றும் பரல்களில் எரிபொருளை வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில், 4 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் உடன் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் 4 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களே இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, பொலிஸாரின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

*எரிபொருள், மின்சாரம், எரிவாயு, நீர்*

## கட்டணங்களை அதிகரியுங்கள் மத்திய வங்கி பரிந்துரை

கொழும்பு,மே 21

மின்சாரம், எரிபொருள், எரிவாயு, மற்றும் நீர் என்பவற்றின் கட்டணங்களை மேலும் அதிகரிக்குமாறு மத்தியவங்கி பரிந்துரை செய்துள்ளது.

நுகர்வோர் பொருள்கள் மற்றும் சேவைகளை நடத்தும் நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டம் காரணமாகவே இது போன்ற பரிந்துரைகளைச் செய்ய வேண்டியுள்ளது.

இலங்கையின் வரி வருமானம் குறைவாக உள்ளது. அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதில் ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால், அரசாங்க வருமானத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (க-இ)

## வாகனங்களுக்கு மட்டும் எரிபொருள் விநியோகம்

கொழும்பு, மே 21

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டில் வாகனங்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது. உடன் நடைமுறைக்கு வரும் வகையில் போத்தல்கள், கான்களில் எரிபொருள் வழங்கப்படமாட்டாது என்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,இ)

*பரீட்சைக் கடமைக்குச் செல்லும்*

## அரச அலுவலர்களுக்கு முன்னுரிமையில் எரிபொருள்

கொழும்பு, மே 21

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகடமைக்குச்செல்லும் அரசஅலுவலர்களுக்குமுன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்க வேண்டும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய [illegible] ஆணையாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் பரீட்சைக் கடமையில் [illegible] பட்ட நேரத்தில் கடமை நிலையங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே பரீட்சைக் கடமைகளுக்காக தனிப்பட்ட மற்றும் அரச மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களைப் பயன்படுத்தும் அலுவலர்களுக்கு தடையில்லாமல் எரிபொருள் வழங்க வேண்டியுள்ளது.

இதற்கமைய பரீட்சைக் கடமைக்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் நாளை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை தங்களது பரீட்சை நியமனக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் காண்பித்து தங்களுக்கு அருகில் உள்ள எரிபொருள் நிலையங்களில் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றுள்ளது. (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பிடம் : யாழ். வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரம்
வசிப்பிடம் : கந்தர்மடம் பழம் வீதி, யாழ்ப்பாணம்.

கடந்த 31.05.2021 அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

## அமரர் பேபிராணி சுப்பிரமணியம்

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்விற்கு ஒளி ஏற்றவந்த தெய்வமே!

எங்கள் பார்வையிலிருந்து நீங்கள்
மறைந்து ஓராண்டானதை
நம்ப மறுக்கின்றதம்மா விழிகள்

நீங்கள் இல்லாத இந்த உலகத்தில்
இப்போது நாம் வாழும் ஒவ்வொரு நிமிடமும்
ஒளியற்ற விழிகளோடு வாழ்கிறோம்
உணர்வற்ற உடலோடு
நடமாடும் நடைப்பிணமானோம்
ஒவ்வொரு கணப்பொழுதும்
உயிர் எம்மைப் பிரிவதாய் உணர்கிறோம்
எத்தனை நாளானாலும் உங்கள்
நினைவுகள் எப்படி எம்மை விட்டு நீங்கும்?

அம்மா... இன்று விண்ணுலகச் சென்ற உங்கள்
நினைவுகளோடு மட்டும் மூழ்கித் தவிக்கின்றோம்.

(எ.J4767) (2.6)

பழம் வீதி, கந்தர்மடம். குடும்பத்தினர்
077 908 2146



## பாப்பரசர் மூட்டுவலியால் கடும் அவதி


ரோம், மே 21
பாப்பரசர் பிரான்சிஸ் வலது முழங்கால் வலியால் அவதி அடைந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

85 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த சில நாள்களாக மூட்டு வலிக்காக சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்.

அத்துடன் நடப்பதற்கு சிரமம் ஏற்பட்டுள்ள நிலையில் அவர் சக்கரநாற்காலியையும் பயன்படுத்தி வருகிறார். இதேவேளை அவர் அடுத்த மாதம் லெபனான் நாட்டுக்கு 2 நாள்கள் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (ச-இ)

# ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் பரவும் குரங்கு அம்மை நோய்

### 40க்கும் மேற்பட்டோர் பாதிப்பு



**மட்ரிட், மே 21**

**பிரிட்டனில் கடந்த வாரம் கண்டறியப்பட்ட குரங்கு அம்மை நோய் தற்போது ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் பரவி 40 இற்கும் மேற்பட்டோருக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

அத்துடன் அமெரிக்காவிலும் ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் கண்டறியப்பட்டுள்ளது. அவர் அண்மையில் கனடாவில் இருந்து திரும்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆபிரிக்காவில் ஏற்படும் இந்த குரங்கு அம்மை நோயானது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பரவிவருவது குறித்து ஆய்வு நடத்துமாறு உலக சுகாதார அமைப்பு உத்தரவிட்டுள்ளது. இந்த நோய் அதிகளவில் இளைஞர்களுக்கே பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அம்மைநோயால் பாதிக்கப்பட்டவர்களைப் போன்று உடலில் சொறி ஏற்படுவதற்கு முன்பாகக் காய்ச்சல், தசை வலி மற்றும் வீக்கம், கைகளிலும், உடலிலும் புண்கள் போன்ற அறிகுறிகளுடன் இந்த நோய் தொடங்குகிறது. (ச-இ)

# பெண் செய்தி வாசிப்பாளர்களுக்கும் தலிபான்கள் கட்டுப்பாடு

காபூல், மே 21
ஆப்கானிஸ்தானில் பெண் செய்திவாசிப்பாளர்கள் மற்றும் பெண் தொகுப்பாளர்கள் திரையில் தோன்றும் போது தங்களுடைய முகத்தை மூடி கண்கள் மட்டும் தெரியும்படியாக இருக்கவேண்டும் என தலிபான்கள் உத்தரவிட்டு[illegible] பெண்கள் பொதுவெளியில் [illegible] கால் வரை மறைத்தபடி புர்கா அணிய வேண்டும் என அண்மையில் தாலிபான்கள் உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

இந்தநிலையில் தற்போது, பெண் செய்தி வாசிப்பாளர்கள் முகத்தை மூடிக் கொண்டு செய்தி வாசிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என செய்தி நிறுவனங்[illegible]லாமுக்கத் [illegible] உத்தரவு பிறப்பித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கறிகளின் விலை உச்சம்

மரக்கறிகளின் விலை கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது 60 வீதத்தால் அதிகரித்துள்ளது.
அதற்கமைவாக ஒரு கிலோ தக்காளி 700 ரூபா வரைக்கும், ஒரு கிலோ பச்சை மிளகாய் கிலோ 650 ரூபா முதல் 700 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.
இவ்வாறே ஏனைய மரக்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது என்று இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார மைய ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (க-இ)

### நாடாளுமன்றில்
# எம்.பிக்களுக்கு பகலுணவு 'கட்'

**கொழும்பு, மே 21**
**நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கும் பகலுணவை இடைநிறுத்துமாறு வலியுறுத்தி, ஆளும் தரப்பின் 53 உறுப்பினர்கள் சபாநாயகரிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டு மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள வேளையில், ஒருவேளை உணவை பெற்றுக்கொள்வதற்கும் பெரும் சவால்களை எதிர்க்கொண்டுள்ளனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற சேவையாளர்களுக்கான பகலுணவுக்கு மாத்திரம் பெருந்தொகை நிதி செலவிடப்படுகின்றது.
அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பகலுணவை இடைநிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம். நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது, முழுநாளும் விவாதம் இடம்பெறும் நாள்களில், உணவகங்களின் விலைக்கமைய உணவுப்பொதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் நெருக்கடி நிலைமைக்கு இறுதித் தீர்வு காணும் வரை, இதனைச் செயற்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-இ)

## கொழும்பு மக்கள் விரைவில் வீதிக்கு இறங்குவார்கள்
### எதிர்வுகூறுகிறார் முஜிபுர் எம்.பி.

கொழும்பு, மே 21
கொழும்பில் வசிப்பவர்கள் விரைவில் வீதிக்கு வருவார்கள் என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கொழும்பில் உள்ள உணவகங்கள் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மூடப்பட்டுள்ளன. கொழும்பில் வசிப்பவர்களுக்கு மாற்றாகப் பயன்படுத்த விறகு கிடைக்கவில்லை. மண்ணெண்ணெயும் கிடைக்கவில்லை.
பொதுமக்கள் வீதிக்கு வரும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பல்வேறு குழுக்களின் மீது பழி சுமத்த முயற்சிக்கக் கூடாது. மண்ணெண்ணெய் வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (ஒ-இ)



## கலவரத்தில் சேதமடைந்த பேருந்துகளுக்கு நஷ்டஈடு

கடந்த 9 ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகளில் சேதமாக்கப்பட்ட பேருந்துகளுக்கு விரைவில் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கப்படும் என்று என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
வன்முறைகளின் போது பேருந்துகளைச் சேதப்படுத்திய அனைவரையும் கைது செய்யுமாறு வலியுறுத்துகின்றோம்.
அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர்களிடமிருந்தே நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (க-இ)

## தெமோதரை வனப்பகுதி விஷமிகளால் தீக்கிரை

கொழும்பு. மே 21
பதுளை- தெமோதரை புகையிரத நிலையத்தைச் அண்மித்த வனப்பகுதிக்கு இனந்தெரியாதவர்களால் தீவைக்கப்பட்டுள்ளது.
இதில் 40 க்கும் மேற்பட்ட ஏக்கர் வனப்பகுதி எரிந்து தீக்கிரையாகிய நிலையில், அந்தப்பகுதி மக்கள் தீயைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தபோதும் வனப்பகுதி முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இந்த தெமோதரை புகையிரத நிலைய வனப்பகுதி பெரிதும் கவர்ந்து வந்தது. அதற்கு அங்குள்ள மலைத்தொடர் அழகான தோற்றத்தை அளித்தது.



இந்த நிலையில் இனந்தெரியாதோரால் நேற்று முன்னதினம் தீ வைக்கப்பட்டமையால் அந்த மலைத் தொடரில் காணப்பட்ட பெரும் மரங்கள் நாசமாகி பசுமையான தோற்றம் அழிவடைந்துள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் சுற்றுச் சூழலும் பெரிதும் பங்குவகிக்கிறது. ஆகவே இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பேருந்து எரிப்பு: சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 21
மிரிஹானவில் ஜனாதிபதியின் இல்லத்துக்கு அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பேருந்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
மிரிஹானவில் பேருந்து ஒன்று எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பில், சந்தேகநபர்களைக் கைது செய்ய உதவுமாறு பொலிஸார், பொதுமக்களின் உதவியை நாடி சந்தேகநபர்களின் ஒளிப்படங்களை வெளியிட்டிருந்தனர்.
இதனையடுத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (க-இ)

## வன்முறையை தூண்டினாராம் பெண் ஊடகவியலாளர் கைது

கொழும்பு, மே 21
சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி வன்முறைகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார். நாரஹேன்பிட்டியவைச் சேர்ந்த 39 வயதுடைய தொலைக்காட்சி பெண் ஊடகவியலாளரே கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-இ)

## மே9 வன்முறைச் சம்பவம் உண்மை ஆணைக்குழு
### பத்துக் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, மே 21
மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கு உண்மை ஆணைக்குழுவை அமைக்கவேண்டும் என்று பத்துக் கட்சிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. ஜனாதிபதிக்கு இது குறித்து பத்துக் கட்சிகளும் கடிதமொன்றை எழுதியுள்ளன.
9ஆம் திகதி இடம்பெற்ற அனைத்து வன்முறைகள் குறித்தும் ஆழமாக ஆராய்ந்து அதற்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இதற்காக உண்மை ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க கோரியுள்ளார். (ஒ-இ)

## அத்துகோரல கொலை; பேருந்துச் சாரதி கைது

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நாட்டில் அண்மையில் இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிராக வன்முறையின்போது நிட்டம்புவவில் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து அத்துகோரல எம்.பி. கட்டடமொன்றில் தஞ்சம் புகுந்திருந்தார்.
பொதுமக்கள் கட்டடத்தைச் சுற்றி வளைத்ததால் அவர் தனது சொந்தத் துப்பாக்கியால் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்பட்டிருந்தது
எனினும் பிரேத பரிசோதனையில் தாக்குதலால் ஏற்பட்ட காயங்களிலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்து மேலதிக விசாரணைகளில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையால் வீழுந்த அரசியல்வாதிகளை விட

## போரில் வீடுகளை இழந்தோருக்கே முதலில் முன்னுரிமை வழங்கவும்

*வலி.மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், மே 21

போரில் வீடுகளை இழந்த வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கே வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்னுரிமை வழங்க வேண்டும். மாறாக அரசாங்கத்துக்கு எதிராக வன்முறையில் வீடுகளை இழந்த அரசியல்வாதிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியதில்லை என்று வலி.மேற்குப் பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் நடனேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர் இதயகுமாரன், அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் புரட்சியால் அரசுடன் ஒட்டியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் சார்ந்தோரின் இல்லங்கள் எரிக்கப்பட்டன.

இது நடந்து ஒரு மாதம் கூட முடியாமல், வீடுகளை இழந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான முன்மொழிவுகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது கண்டனத்துக்குரியது.

தமிழர் தாயகத்தில் போரால் தங்களுடைய வீடுகளை இழந்து 30 வருடங்களுக்கு மேலாகவும் வீடுகளின்றி பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர் -என்றார்.

குறித்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென சபையின் உறுப்பினர் பொன்ராசா வழிமொழிந்தார். இதனை அடுத்து சபையின் உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (க-125)

## வலி. மேற்கில்

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி விரைவில் அமைப்பதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 21

**வலிகாமம் மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொது இடமொன்றில் விரைவில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் அந்த நினைவுத்தூபியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்று சபையின் உறுப்பினர் இதயகுமாரன் கோரிக்கை விடுத்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது உறுப்பினர் இதயகுமாரன், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை சிறப்பாக நடத்தியிருந்தனர்.

அதனைப்போன்று பிரதேசசபை வளாகத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அமைத்தால், நிகழ்வுகளை நடத்த முடியும் -என்றார்.

இதற்குப் பதிலளித்த சபையின் தவிசாளர் நடனேந்திரன், பல்கலைக்கழகத்தில் மாணவர் சக்தி மாபெரும் சக்தியாகக் காணப்படுகின்றது. அவர்கள் போராடி அந்த நினைவுத்தூபியை அமைத்தனர். எங்களுக்குத் திணைக்கள ரீதியாகப் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே நினைவுத்தூபியை பிரதேசசபை வளாகத்துக்குள் அமைக்காது வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள ஏதாவது ஒரு பகுதியைத் தெரிவு செய்து அந்த இடத்தில் அமைக்கலாம் -என்றார்.

தவிசாளரின் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

வெகுவிரைவில் பொது இடத்தைத் தெரிவு செய்து, முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்பட வேண்டும் என்று சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-125)

## கொள்கையை மீறுவோருடன் இணைந்து பயணிக்க முடியாது

விக்கிக்கு சூடு வைக்கிறார் சிறீகாந்தா

யாழ்ப்பாணம், மே 21

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துகின்ற தரப்புக்கள் சிங்களபௌத்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் இருப்பது நீண்ட காலக்கொள்கை. இதற்கு விதிவிலக்காகச் செயற்படுவோருடன் இணைந்து பயணிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று நிபந்தனைகளை நிறைவேற்றினால் அமைச்சரவையில் இணைவது தொடர்பில் பரிசீலிக்க முடியும் என்று விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் குறிப்பிட்ட மூன்று நிபந்தனைகளும் நியாயமானவை. ஆனால் அதனை நிறைவேற்றினால் அரசாங்கத்தில் இணைவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்பது பாரதூரமான விடயம். அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். விக்னேஸ்வரன் இந்த விடயத்தில் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். மீறிச் செயற்படுவாராயின், ஒருபோதும் அரசியலில் ஒன்றாகப் பயணிக்க முடியாது. இது தொடர்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கடுமையாக தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

ஆனால் விக்னேஸ்வரனின் தோற்றப் பொலிவை வைத்து அவரைப் பொட்டுத் தாடி என கஜேந்திரகுமார் முன்வைத்துள்ள அரசியல் விமர்சனம் மிகவும் அநாகரிகமானது -என்றார். (க-26)

## முள்ளிவாய்க்காலில் இறுதியில் நடந்தவை இனப்படுகொலையே

வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

ஈ.பி.டி.பி. வெளிநடப்பு

முள்ளிவாய்க்காலில் இறுதியில் நடந்தவை இனப்படுகொலையே என்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர் சுபாஜினி, 13 வருடங்களுக்கு முன்பு தமிழர் தாயகத்தின் முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதை இந்தச் சபை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று பிரேரணை முன்வைத்தார்.

இதனையடுத்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஓர் உறுப்பினரும் சபையில் இருந்து உடனடியாக வெளியேறினர்.

குறித்த பிரேரணையை சபையின் உறுப்பினர் பொன்ராசா வழிமொழிந்தார். இது இனஅழிப்பு என சபையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துக்களைத் தெரிவித்தனர். அதனையடுத்து குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (க-125)

## முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி

சாவகச்சேரி, மே 20

தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி முன்பள்ளிக் குடும்ப ரீதியாக நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இதற்கமைய சாவகச்சேரி முன்பள்ளி குடும்பத்தைச் சேர்ந்த சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி, சாவகச்சேரி ஸ்ரீமுருகன் முன்பள்ளி, சாவகச்சேரி தூய தோமஸ் முன்பள்ளி ஆகியவற்றின் கண்காட்சி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது சிறார்களால் ஆக்கப்பட்ட பொருள்களை தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.அரியரத்தினம், முன்பள்ளி இணைப்பாளர் அ.பிரியதர்சினி ஆகியோர் பார்வையிட்டனர். அத்துடன் இன்று தனங்களப்பு பண்டிதமணி முன்பள்ளி, சாவகச்சேரி பாரதி முன்பள்ளி, சாவகச்சேரி உதயசூரியன் முன்பள்ளி ஆகியவற்றின் சிறார்களின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் இடம்பெறவுள்ளது. (ஒ-14-9)




31ஆம் நாள் நினைவஞ்சலி



21.04.2022 அன்று இறைவனடி சேர்ந்த

அமரர்

சுப்பையா தம்பிநாயகம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

நொடியொன்றில் உயிர்கொண்டு போனதெங்கே
மிடுக்காய் வாழ்ந்ததுபோல் மிடுக்காக
வெடுக்கெனவே
சென்றதன் மாயமென்ன ஐயா! இவ்வுலகு
போதுமென
அரனடி சேர்ந்திட்டீர் நம்வீடோ உங்கள்
கலகலப்புக் காணாது களையிழந்து வாடுதையா
காலங்கள் கடந்தாலும் உங்கள் குரலோசை
என்றும் நம்காதில் ஒலித்தே நினைவூட்டும்
உங்கள் நினைவோடு என்றும் நாமிருப்போம்
உமதாத்மா இறையடியில் சாந்திபெற!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

பிரிவால் துயருறும்...

மனைவி மற்றும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

சுன்னாகம் பஸ் நிலையத்தில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. 40 அடி நீளம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பார்வையிடலாம் (CS 44769) (3/6)

**077 853 5599**



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் உஷன் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய கூலியாட்கள் தேவை.

**076 760 0403, 077 592 5371**


## குருதி அமுக்க பரிசோதனை



சாவகச்சேரி, மே 21

உயர்குருதி அமுக்க வாரத்தை முன்னிட்டு கைதடி ஆயுள்வேத மருத்துவர்களால், தென்மராட்சிப் பிரதேச செயலக அலுவலர்களுக்கு குருதி அமுக்கப் பரிசோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி திலகசபா நிதியத்தின் அனுசரணையுடன் பிரதேச ஆயுள்வேத அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் குறித்த பரிசோதனை இடம் பெற்றது.

(ஒ-14-9)


## உணர்வு திரண்டு விழிகள் நிறைந்த கண்ணீர் அஞ்சலி



### R.S. நடராஜா ( RSN )

( முன்னாள் அதிபர் – பலாலி ஆசிரியர் கலாசாலை )

"அறிவுப் பெருங்கடல்
ஆளுமை விருட்சம்
இணையிலா கல்விப்புலம்
ஈசனடி இணைந்தது"

உலகத்தில் தலைநிமிர்ந்து நடக்க வைத்தீர்
ஊருக்கும் பணியாற்றப் பழக்கிவிட்டீர்
எல்லோரின் மனதினுள்ளும் நிறைந்து-இன்று
ஏங்க வைத்து இறையடியில் இணைந்து விட்டீர்

எங்களின் ஆசான் R.S நடராஜா அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளின் துயரில் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்
(1990-1991ம் ஆண்டு அணி)
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை



## தவறவிடப்பட்டுள்ளது



அரசடி திருநெல்வேலி, நல்லூர் பகுதியில் நேற்று (20.05.2022) காலை 08.00 மணியளவில் **DJI Drone Camara** (பறக்கும் கமரா) ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள், தகவலறிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி எண்ணிற்கு தகவல் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 617 6776, 077 8922 812**


## கார் மோதி ஒருவர் காயம்

கிளிநொச்சி, மே 21

பளை இந்திராபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் கார் மோதி ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீதியால் சென்ற நபரை யாழ்ப்பாணம் நோக்கி வந்த கார் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்தவர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் அவர் ஒரு விசேட தேவையுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-14-9)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி முதலாம் ஒழுங்கை பகுதியில் 10 பரப்புக் காணி சுற்றுமதிலுடன் அவசர விற்பனைக்கு உண்டு. குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM**

தொடர்பு : **076 469 8347, 076 844 6536**



## செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை

பதிவு இல.HA / 4 / JA / 266

393 /30, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## பொதுக்கூட்ட அறிவித்தல்

- காலம் : 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
- இடம் : செம்மணி இந்துமயான மண்டபம்
- தலைவர் : திரு.லயன்.சி.இலட்சுமிகாந்தன்

அனைவரையும் கூட்டத்தில்
கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(CS 447651) (2.6)

செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04
05
1944



உதிர்வு
31
05
2021

அமரர்

### வைத்திலிங்கம் துரைராசலிங்கம்

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மை வழிநடத்திய குல விளக்கே
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவலைகள்
எம்மை விட்டு மறையாது தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
021 224 0445

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### தனபாலசிங்கம் இராசம்மா



யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு கலம்புரையை பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தி ஆஸ்பத்திரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் இராசம்மா அவர்கள் கடந்த (18.05.2022) புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவஞானம் தம்பதியரின் அன்பு மருமகளும், தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், உபேந்திரன் (பொறியியலாளர் - கனடா), மேனகா (பிரான்ஸ்), கஜலக்ஷ்மி (UK), திருநிலைநாயகி (கனடா), கிரீந்திரன் (மருந்தாளர்- தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை), இந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காந்தவதனி, ஜெயதேவன், பத்மநாதன், சங்கர் ஆகியோரின் அன்பு மாமியும், பிரணீஸ், அனிஸ், திபிசன், அக்சயன், பவிஸ், அனிகா, அகிசன், அகிரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சுப்பிரமணியம், நல்லம்மா மற்றும் கந்தசாமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நவமணி, ஐயாத்துரை, தங்கராசா, கமலாதேவி மற்றும் நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இந்திரன் - 077 923 1941
கிரீந்திரன் - 076 647 5759

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 832) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் வேலைக்கு செல்லும் பெற்றோர் தமது மூன்று வயது பெண் குழந்தையை வீட்டில் தங்கி இருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண்ணை எதிர்பார்க்கின்றனர். (CS 44766)(2/6)

**077 248 4360**

## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு பிறந்த சுயதொழில் செய்யும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (CS 44773) (3.6)

தொடர்பு

**077 634 1413, 074 263 4667**

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
**திரு. வேலாண்டி ரவீந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்

### வேலாண்டி அறியாள்

2022.05.20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (CR 35997) (3.6)

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

## Chundikuli Girls' College Jaffna

**Vacancy**
**Post of Accountant**

We are a leading private girls' school in Jaffna, established by the Church Missionary Society of England in 1896. We are looking for a professionally qualified, committed and motivated candidate, preferably a female, to fill the post of accountant.

**Requirements:**

- Should possess a full/part qualification from a recognized Accounting body (CIMA / ACCA / ICA).
- Prior working experience in computerized accounting system. Knowledge in the preparation of financial statements, Auditing procedures, financial reports and project cost reports.
- Good command of English.
- Age between 30 - 55 years.

Salary is negotiable and will commensurate with qualifications and experience.

Apply before 6th June 2022 with the names of two non - related referees. Please indicate the post applied for, on top of the envelope. Only shortlisted candidates would be called for an interview.

**Principal**
**Chundikuli Girls' College,**
**6, Colombogam road,**
**Jaffna.** (CR 35989) (3/6)

**Email: forwardcgc@yahoo.com**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
**24.03.1956**



**மறைவு**
**18.05.2021**

கடந்த 18.05.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் ஆசைப்பிள்ளை ஜெகநாதன்

( ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் – பனை அபிவிருத்திச்சபை யாழ்ப்பாணம், முன்னாள் தலைவர் – அரியாலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், முன்னாள் தலைவர் – யாழ் ப.நோ.கூ. சங்கம் , பதிவு செய்யப்பட்ட முன்னாள் பட வரைஞர்– யாழ் மாநகர சபை)

*அன்பின் அப்பாவே!*
*பாசத்தின் பாசறையே*
*நேசத்தின் நிறைவிடமே*
*காத்தலின் காப்பிடமே*
*ஓராண்டு கடந்தாலும்*
*நிலைக்கும் உங்கள் நினைவுகள் - எம்முடன்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*

**இல 39, நொத்தாரிஸ் வீதி,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**
**021 222 6277**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த (21.04.2022) வியாழக்கிழமை
அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் சின்னத்தம்பி சிவகாமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.05.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர்வளையங்கள், பதாகைகள் சாத்தியும், அஞ்சலி செலுத்திய எம் அன்புக்குரிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதியாத்திரையில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**தோற்றம்**
**08.06.1937**

**மறைவு**
**21.04.2022**

**கரந்தன் சந்தி,**
**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**

**குடும்பத்தினர்**
**076 161 5651**

(cs 44674) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், மே 21

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2021 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டு மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

தேசிய ரீதியில் தமிழ் மொழியில் முதலாம் இடத்தை குறித்த பாடசாலையின் மாணவன் பெற்றிருந்த நிலையில் பாடசாலை நிர்வாகத்தினரால் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ஒ-14-20)

## சேவை நயப்பு விழா !

யாழ். மே 21

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில், நீண்டகாலமாக அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் ச.கிருஷ்ணனின் சேவை நயப்பு விழா, இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் தற்போதைய அதிபர் திருமதி தர்மினி அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரைகளை மட்டுவில் வடக்கு பனையடிப்பிள்ளையார் ஆலய குருக்களும், மட்டுவில் லூர்து மாதா தேவாலயத்தின் பங்குத்தந்தையும் நிகழ்த்துவர்.

(ம-131)



## காணி விற்பனைக்கு

சுன்னாகம் வீதி, புத்தூரில் நில.பர.05 குளி 05 விஸ்தீரணம் கொண்ட கொழும்பு சுப்பர்மார்ட் பிரைவட் லிமிட்ட் நிறுவனமும் அத்துடன் இணைந்த வீடும், சுற்று மதிலும், கிணறும், அமைந்த வியாபார நிலையமானது விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:- 071 480 3765

## தேவை

எமது சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு

**முகாமையாளர் தேவை**

- விலாசம் - அன்பு சிறுவர் இல்லம், கிளிநொச்சி
- முன்னுரிமை - ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு
- சம்பளம் - ரூ 40,000 இற்கு மேல்
- ஏனையவை நேரில் பேசி தீர்மானிக்கப்படும் (cr.8416) (2.6)

தொடர்பு: 071 535 4500

## யாழ் / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

2021 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations Congratulations Congratulations



N.Sarukesi 181 | M.Manshiga 181 | T.Ketharani 151

Congratulations Congratulations

பாராட்டி வாழ்த்துபவர்கள் :
தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்

(CR35991) (4/6)

## NOTICE FOR ANNUAL GENERAL MEETING 2022

The Annual General Meeting of Jaffna Johnians Sports Club will be held on saturday, 4th June 2022 at 9.00 a.m. at the College Auditorium.

Those who wish to submit resolutions please forward the same to the secretary on or before 28th may 2022.

President Secretary

**Jaffna Johnians Sports Club**
**St. John's College, Jaffna** (CR 35997) (3.6)

## தேவை

எமது கல்லூரி விடுதியில் சமையல் வேலைக்கு 30 - 55 வயது வரையுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களைத் தம் சுயவிபரத்துடன் 01.06.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு நேரில் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கவும்.

அதிபர்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

(CR 35994) (3/6)



## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 16 - 12 - 1945



ஆண்டவன் அடியில் 20 - 05 - 2022

### திருமதி சிவக்கொழுந்து சிவஞானம்

[ ஓய்வு நிலை ஆசிரியை - யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி யா/சாவ.இந்துக்கல்லூரி]

யாழ் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சிவஞானம் அவர்கள் (20.05.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், சின்னையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவகுமார் (பிரான்ஸ்), சிவபவன் (லண்டன்), பவானி (அவுஸ்திரேலியா) ஆகியோரது பாசமிகு அம்மாவும், குமுதினி, இராஜராஜன் அவர்களின் அன்புமிகு மாமியாரும், சிவப்பிரியன், ஆரணி, துஷியந்தி, வினுசாகினி, யுகராஜன், ஆகியோரது பேர்த்தியும், சுப்பிரமணியம் (RMP), கணபதிப்பிள்ளை(பொறியிலாளர்), காலஞ்சென்ற சிவஜோகம் பாலசுப்பிரமணியம், சிவஞானம், சந்திரகாசன், கமலாதேவி சிவானந்தன் (இளைப்பாறிய ஆசிரியை), கெங்காதரராஜா ஆகியோரது சகோதரியும், ப.வே.இராசரத்தினம் (குட்டி விதானை) சரஸ்வதி, மார்க்கண்டு – ராஜபூபதி அவர்களின் சம்பந்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.05.2022 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

பவானி (மகள்):- +61 499 486 212
சிவகுமார் (பிரான்ஸ்):- +33 787402071
சிவபவன் (லண்டன்) :- +44 7851146429

தகவல்:
குடும்பத்தினர்
077 214 1384

## மரண அறிவித்தல்

மலர்வு 01 10 1931



உதிர்வு 17 05 2022

### திரு. மனுவேற்பிள்ளை சுவாம்பிள்ளை (பொன்னு)

யாழ். இளவாலை வட்டப்புலத்தை பிறப்பிடமாகவும் கனடா Mississauga இல் வசித்தவருமான மனுவேற்பிள்ளை 17.05.2022 இல் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற மனோ அவர்களின் ஆருயிர் கணவரும் பேள்சி, றியன்சி, ஜெசி, சாள்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை–ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை–நட்ச்சத்திரம் தம்பதிகளின் மூத்த மருமகனும் ஜோசப், அனுராதா, தேவா, சாகார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அன்ரனிப்பிள்ளை (பெரிய தம்பி), தம்பிராசா, செல்லத்தம்பி, பிலோமினா ராஜேஸ், துரை, மன்மதன் ஆகியோரின் அன்பு சகோதரனும் யோஆன்–ஆஸ்லின், யொனத்தன், யொஸ்லின், குருசேவ், மகிமா, வினோதன், அன்ரனி, ஆஸ்லி, அனிசா, சாகில் ஆகியோரின் அன்பு பேரனும் அருந்ததி, மரியன்னா, மாலா, அல்போன்ஸ், கலா, ஜெயந்தி, Sr.Domonica, பேபி, ராணி, மலர், பபா, ரஞ்சன், ரஞ்சித் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். Our lady of the airway Church (Mississauga Canada) இல் இன்று இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனை தொடர்ந்து Assumption Catholic Cemetery-இல் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் (மணி)



தோற்றம் 10.11.1939 மறைவு 20.05.2022

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, **தாவடியை** வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராசலட்சுமி சண்முகலிங்கம் (மணி) நேற்று (20.05.2022) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற இளையதம்பி சிகொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, பரமேஸ்வரி, நாகரத்தினம் மற்றும் கதிர்காமராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவீந்திரன் (Canada), இந்திரலோஜினி, கமலலோஜினி, சுசீந்திரன் (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமாரி, சிவநேசன், சோதிராணி, காலஞ்சென்ற சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், விரோஷன், லக்ஷன், பௌஷியா, சஹீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்
சிவநேசன் (மருமகன்) - 076 300 1654
இந்திரலோஜினி (மகள்) - 076 8975305

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 8261)-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கெஹலிய ரம்புக்வெல


ரமேஷ் பத்திரன

# சர்வகட்சி அமைச்சரவையே நேற்றுப் பதவியேற்றதாம்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு

**கொழும்பு, மே 21**
**சர்வகட்சி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையின் 9 அமைச்சர்கள் கோட்டை ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சுயாதீன அணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளைப் பிரதிநிதித்து வப்படுத்துபவர்கள் அமைச்சர்களாகப் பதவியேற்றிருந்தனர். இருப்பினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன தமது கட்சியின் இணக்கப்பாடின்றியே இந்த அமைச்சரவைப் பதவியேற்பு இடம்பெற்றதாகச் சுட்டிக்காட்டியுள் ளன. (ஒ-5)

| | |
|---|---|
| **நிமால் சிறிபால டி சில்வா -** | துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் |
| **கலாநிதி சுசில் பிரேமஜயந்த-** | கல்வி அமைச்சர் |
| **கலாநிதி கெஹலிய ரம்புக்வெல -** | சுகாதார அமைச்சர் |
| **கலாநிதி விஜயதாச ராஜபக்ச-** | நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் |
| **ஹரின் பெர்னாண்டோ -** | சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் |
| **ரமேஷ் பத்திரன -** | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் |
| **மனுஷ நாணயக்கார -** | தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் |
| **நளின் பெர்னாண்டோ -** | வணிகம், வர்த்தக, உணவுப் பாதுகாப்பு அமைச்சர் |
| **டிரன் அலஸ் -** | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் |

# சுயாதீன அணியிலிருந்தும் இருவர் அமைச்சுப் பதவியேற்பு


நளின் பெர்னாண்டோ


டிரன் அலஸ்

கொழும்பு, மே 21
விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 10 கட்சிகளின் கூட்டணியில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் அவர் நேற்று பதவியேற்றார்.
எதிரணியில் இருந்துகொண்டு அரசின், மக்கள் நலத்திட்டங்களை ஆதரிப்பதெனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் 10 கட்சிகளின் கூட்டணி தீர்மானித்திருந்தது. இந்த நிலையிலேயே 10 கட்சிகளின் கூட்டணியில் இடம்பெற்றிருந்த டிரான் அலஸ், அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுள்ளார்.
அத்துடன், அநுரபிரியதர்சன யாப்பா தலைமையிலான சுயாதீன அணியில் இடம்பெற்றிருந்த பொதுஜன பெரமுனவின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னாண்டோ, வர்த்தகம், கைத்தொழில் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அநுர அணியில் இருந்த சுசிலுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.
தினேஷ் குணவர்தன, ஜீ.எல். பீரிஸ், பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர ஆகிய மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் நால்வர் ஏற்கனவே, அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ள நிலையில், கெஹலிய, ரமேஷ் பத்திரண ஆகிய மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் நேற்று அமைச்சர்களாகினர். (ஒ-44)

# வீராப்புப் பேசிய சு.கவும் சரண்

கொழும்பு, மே 21
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உப தலைவரான நிமால் சிறிபாலடி சில்வாவும், அமைச்சரவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். துறைமுகம், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சுப் பதவி அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை மே 5 ஆம் திகதி சுதந்திரக்கட்சி மீளப்பெற்றுக் கொண்டது. நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப்போவதாகவும் அறிவித்தது.
புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதையும் அந்தக் கட்சி ஆரம்பத்தில் ஏற்கவில்லை. புதிய பிரதமரின் கீழ் எவ்வித பதவிகளையும் ஏற்கக்கூடாதென கட்சியின் மத்திய குழுவும் தீர்மானித்திருந்தது.
எனினும், இதற்கு சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டனர். பிரதமர் ரணிலுடன் பேச்சு நடத்தினர். இதனால் கட்சி பிளவுபடும் அபாயம் ஏற்பட்டது. இதனையடுத்து, அரசுக்கு ஆதரவளிக்கத் தயாரென மைத்திரி, ரணிலுக்குக் கடிதம் அனுப்பினார். இந்த நிலையிலேயே சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் அமைச்சராகியுள்ளார். (ஒ-44)ா


நிமால் சிறிபாலடி சில்வா

# 'சேர் பெயில்' கோஷம் எழுப்பிய ஹரினும் பதவியேற்றார்

கொழும்பு, மே 21
'சேர் பெயில்' என்ற கோஷத்தை அறிமுகப்படுத்தி தொடர்ந்து முழக்கமிட்டுவந்த சஜித் அணி உறுப்பினர்கள் இருவர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்று அமைச்சர்களாகப் பதவியேற்றுக்கொண்டனர்.
ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.
அந்தக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.
சஜித் அணி சார்பில், கோத்தாவுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தியவர்களில் இவ்விருவரும் பிரதானமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

### கோத்தாவை விமர்சித்து

# பதவியிழந்த இருவர் அமைச்சர்களாயினர்

கொழும்பு, மே 21
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கடுமையாக விமர்சித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.
கொழும்பு துறைமுகநகர் சட்டம், கொழும்பு-துறைமுகத்தின் கிழக்கு முனையம் போன்ற விவகாரங்களின் போது ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்தவர்தான் விஜயதாச ராஜபக்ச. இதற்குப் பதிலடியாக தொலைபேசி ஊடாக, விஜயதாச ராஜபக்சவை தொடர்புகொண்ட ஜனாதிபதி கோத்தா, கடுமையாகத் திட்டித் தீர்த்திருந்தார்.
ஊடக சந்திப்பின் போது இந்தத் தகவலை விஜயதாச வெளியிட்டிருந்தார். இதனால் அரசிலிருந்து விலகி, விஜயதாச ராஜபக்ச சுயாதீனமாகச் செயற்பட்டார். அவருக்கு நேற்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஜனாதிபதியையும், அரசையும் கடுமையாக விமர்சித்ததால் இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்தான் சுசில் பிரேமஜயந்த. தற்போது அவரிடம் கல்வி அமைச்சுப் பதவி கையளிக்கப்பட்டுள்ளது. (ஒ-44)


சுசில் பிரேமஜயந்த


விஜயதாச ராஜபக்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் எரிவாயுத் தட்டுப்பாடு

# உணவக, சிற்றுண்டி ஊழியர்கள் பாதிப்பு



யாழ்ப்பாணம், மே 21

எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக உணவக நாள்கூலித் தொழிலாளர்கள் மற்றும் சிற்றுண்டி வியாபாரிகள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள எரிவாயுத் தட்டுப்பாட்டால் மன்னார் மாவட்டத்தில் அநேக உணவகங்கள் உட்பட மாலைநேர சிற்றுண்டி வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

இதனால் உணவகங்களில் நாள்கூலித் தொழிலாளர்கள் பலர் வேலை இழந்துள்ளனர். அத்துடன் பலர் சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாத நிலையில் பணிபுரியும் நிலையங்களிலேயே தங்கியுள்ளனர்.

மாலை வேளையில் சிற்றுண்டி வியாபாரங்களில் ஈடுபடும் வியாபாரிகளும் எரிவாயு தட்டுப்பாட்டால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

"சிற்றுண்டிகளை வீடுகளில் இருந்தே விறகு அடுப்புக்கள் தயார் செய்து விற்பனை செய்தாலும் அதனை நுகர்வோர் குறைந்தளவிலேயே கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள எமக்கு அரசாங்கம் விரைவில் முன்னுரிமை அடிப்படையில் எரிவாயுவை வழங்க வேண்டும்" என சிற்றுண்டி வியாபாரிகள் மற்றும் உணவக நாள்கூலித் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-213)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

**ஜேர்மன் செப்பேட் (LION)**

**35 நாள் நாய் குட்டிகள்**

விற்பனைக்கு

(cs 44745) (2.6)

ச.நிமலன்- 077 251 6160

**வீடு வாடகைக்கு**

சுன்னாகம் Dr.சுப்பிரமணியம் வீதி.
(றோமன் கத்தோலிக்க பாடசாலை அருகாமையில்) அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்களும் விரும்பத்தக்கது

(cs 44726) (2.6)

தொடர்பு: 076 313 6371
Viber : 076 323 2533

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்**
**20 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்.
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

**077 814 7389, 077 241 7589**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 33 பரப்புக் காணிவிற்பனைக்கு.




நிலப்பரப்பு

- ✓இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓கைதடி சந்தி 200 M தூரம்
- ✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை 100 M தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓செம்மண் காணி.
- ✓பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: 077 6234 204**
**077 2880 152**
**076 6583 621**

(CS 877) 1/6

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 193 பரப்புக்காணி விற்பனைக்கு
(மேட்டு நிலம்)




- ✓ பருத்தித்துறை வீதியிலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் அம்மன் கோயில் செல்லும் காபெட் வீதியில் பிரதான வீதியிலிருந்து 200 M தூரம்.
- ✓ வீடு கட்டுவதற்கும், கால்நடை பண்ணை அமைப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் உகந்த இடம்.
- ✓ அயலில் குடியிருப்புக்கள் உள்ள சூழல்.
- ✓ 5 பரப்பாகவும், 10 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ புத்தூர் மட்டுவில் வீதியில் பிரதான நீர்த்தாங்கி அருகாமையில்
- ✓ நல்ல தண்ணீரூற்று
- ✓ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- ✓ ஒரு பரப்பின் விலை : 150,000 (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

**தொடர்பு: 074 29 13 725**
**074 29 13 726**
**074 29 13 727**

(CS 877B) 1/6

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.04.2022
ஞாயிற்றுக்கிழமை சிவபதம்
அடைந்த எமது
குடும்பத் தலைவர்

**அமரர்**
**இராசரத்தினம்**
**பஞ்சலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டி
கிரியைகள் இன்று
(21.05.2022) சனிக்கிழமை

காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (23.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்விற்கு தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜபாதை வீதி,
கோப்பாய்.

(CS 44755) (3/6)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.